# தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்
# திட்ட செயலாக்க அலகு – கரூர்

**திட்ட செயலாக்க அலகின் செயல்பாடுகள்**

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் கரூர் மாவட்ட திட்ட செயலாக்க அலகு 1997 – 1998 – ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இதனுடைய முக்கிய நோக்கம் ஏழை மகளிரை சுய உதவிக் குழுக்களின் மூலமாக சமூக பொருளாதார மேம்பாடு அடைய செய்வதாகும்

இந்நிறுவனம் கரூர் மாவட்டத்திலுள்ள 11 பேரூராட்சிகள் 4 நகராட்சிகள் மற்றும் 8 வட்டாரங்களுக்குட்பட்ட 158 கிராம ஊராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக 13 தொண்டு நிறுவனங்கள் மற்றும் 14 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

**1 கரூர் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் விவரம் ( 31.03.2011 வரை)**

1. மொத்த மகளிர் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை – 10675
   - ஊரகம் – 8173
   - நகரம் – 2502
2. மொத்த மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை – 158185
   - ஊரகம் – 121701
   - நகரம் – 36484
3. மொத்த SC சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை – 2505
4. மொத்த SC சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை – 37663
5. மொத்த இளைஞர் குழுக்களின் எண்ணிக்கை – 369
6. மொத்த இளைஞர் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை – 4428
7. மொத்த (SC) இளைஞர் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை – 23
8. மொத்த (SC) இளைஞர் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை – 276

மகளிர் திட்டம் மூலம் சுய உதவிக் குழுக்களின் ஊக்குநர் பிரதிநிதிகள் பயிற்சி, குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி, போன்றவை சமுதாய வளப்பயிற்றுனர்கள் மூலமாகவும், மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி மற்றும் இளைஞர்களுக்கான தொழில் திறன் பயிற்சி இதர தொழிற் திறன் பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான தொழில்பயிற்சி நிறுவனங்கள் மூலமாகவும் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்ட செயலாக்க அலகின் கட்டுப்பாட்டிலுள்ள தொண்டு நிறுவனங்கள் உதவியுடன் வங்கிகளிலிருந்து இக்குழுக்களுக்கு அரசு மூலம் மான்யத்துடன் கூடிய கடனுதவி மற்றும் நேரடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இக்குழுக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு வழி வகை செய்யப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் மகளிர் திட்டத்துடன் இணைந்து 13 தொண்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றனர். தொண்டு நிறுவனங்கள் கீழ்க்கண்டுள்ளவாறு 2010–2011–ஆம் ஆண்டில் புதிதாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்குதல் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு பெற்று தந்துள்ளனர்.

| வ.எண் | தொண்டு நிறுவனத்தின் பெயர் | மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டவை | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு பெற்று தந்த விவரம் |
|---|---|---|---|
| 1 | ஏபிசிடி | 45 | 180.80 |
| 2 | அரெட்ஸ் | 167 | 491.59 |
| 3 | கிராமியம் | 157 | 502.52 |
| 4 | கிராமோதயா | 45 | 172.47 |
| 5 | கோல்டு டிரஸ்ட் | 83 | 255.96 |
| 6 | சிப்பி டிரஸ்ட் | 117 | 782.79 |
| 7 | வீடு | 47 | 194.50 |
| 8 | சுவடு | 78 | 214.68 |
| 9 | கூடு | 38 | 215.08 |
| 10 | ஐ.எஸ்.எஸ் | 21 | 278.32 |
| 11 | சினேகிதி | 30 | 126.19 |
| 12 | பிபிடி.எஸ் | 9 | 19.00 |
| 13 | WDT | 65 | 325.59 |
| 14 | PLF | 23 | 199.40 |
| மொத்தம் | | 975 | 3958.89 |

## 2 . 2010 – 2011ஆம் ஆண்டு புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்தது

| வ.எண் | திட்டத்தின் பெயர் | இலக்கீடு | சாதனை |
|---|---|---|---|
| 1 | ஊரகம் (MGNREGS) | 600 | 600 |
| 2 | ஊரகம் (முன்னுரிமை/ ஊராட்சிகள்) | 125 | 125 |
| 3 | நகர்புறம் (Slum Areas) | 200 | 200 |
| | மொத்தம் | 925 | 925 |

## 3. எஸ்.ஜி.எஸ்.ஒய் மற்றும் மகளிர் திட்ட நிதி ஒதுக்கீடு மூலம் சுழல்நிதி 2010 – 2011

| வ.எண் | திட்டத்தின் பெயர் | செயல் திறன் | | நிதி திறன் (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கீடு | சாதனை | மான்யம் | கடன் | மொத்தம் |
| 1 | எஸ்.ஜி.எஸ்.ஒய் திட்ட நிதி | 910 | 910 | 91.00 | 455.00 | 546.00 |
| 2 | மகளிர் திட்டம் நிதி | 200 | 200 | 20.00 | 60.00 | 80.00 |
| | மொத்தம் | 1110 | 1110 | 111.00 | 515.00 | 626.00 |

## 4. எஸ்.ஜி.எஸ்.ஒய் பொருளாதாரகடன் (குழு மற்றும் தனிநபர் கடன்) 2010–2011

| வ.எண் | திட்டத்தின் பெயர் | செயல் திறன் | | நிதி திறன் (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கீடு | சாதனை | மான்யம் | கடன் | மொத்தம் |
| 1 | எஸ்.ஜி.எஸ்.ஒய் பொருளாதார கடன் | 171 | 159 | 181.350 | 532.25 | 713.60 |
| 2 | எஸ்.ஜி.எஸ்.ஒய் தனிநபர்கடன் | | | | | |

## 5. இளைஞர் தொழிற் திறன் பயிற்சி 2010–2011

| வ.எண் | விவரங்கள் | செயல் திறன் | | நிதி திறன் (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கீடு | சாதனை | ஒதுக்கீடு | சாதனை |
| 1 | கொத்தனார் பயிற்சி | 100 | 100 | 8.00 | 7.62 |
| 2 | டெக்ஸ்டைல் ஊஹறனு டிசைனிங் | 25 | 25 | 1.45 | 1.24 |
| 3 | ஹோம் டெக்ஸ்டைல் மற்றும் காஸ்டிங் | 25 | 25 | 1.33 | 1.18 |
| 4 | ஆயத்த ஆடை தயாரித்தல் | 20 | 20 | 1.00 | 0.79 |
| 5 | பிளம்பர் | 15 | 15 | 0.69 | 0.45 |
| 6 | எலக்ட்ரிக்கல் | 15 | 15 | 0.69 | 0.47 |
| மொத்தம் | | 200 | 200 | 13.16 | 11.75 |

## 6. பெண்களுக்கான தொழில் முனைவோர் பயிற்சி 2010–2011

| வ.எண் | விவரங்கள் | செயல் திறன் | | நிதி திறன் (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|
| | | இலக்கீடு | சாதனை | ஒதுக்கீடு | சாதனை |
| 1 | தொழில் முனைவோர் பயிற்சி | 100 | 100 | 4.42 | 4.17 |
| | மொத்தம் | 100 | 100 | 4.42 | 4.17 |

## 7.சுய உதவிக் குழுக்கள் வங்கி கடன் இணைப்பு 2010–2011

கரூர் மாவட்டத்திற்கு வங்கி கடன் இணைப்பு திட்டத்தின் கீழ் ரூ.55 கோடி இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டதில் மார்ச் 2011 ஆம் மாதம் வரை 4004 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ57.40கோடி கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

## 8 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான கலாச்சாரப்போட்டிகள் 2010–2011

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மகளிர் சுயஉதவிக்குழுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு கூட்டமைப்புகளுக்கிடையே கலாச்சாரப்போட்டிகள் நடத்த உத்தரவிடப்பட்டது. அதன்படி, கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கிடையே கீழ்க்கண்டவாறு போட்டிகள் நடத்தப்பட்டது.

1). கோலப்போட்டி
2). ஓவியப்போட்டி
3). குழுநடனப்போட்டி
4). பாட்டுப்போட்டி

வட்டார அளவில் மேற்கண்ட போட்டிகளில் கலந்து கொண்டு முதல் இரண்டாம், மூன்றாம் இடம் பெற்ற கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.500/–, ரூ.300/–, ரூ.200/– பரிசுத் தொகை வழங்கப்பட்டது. மேலும் மாவட்ட அளவில், ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற்ற கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.5000/–, ரூ.3000/– ரூ.2000/– என பரிசுத் தொகை வழங்கப்பட்டது

## 9.மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மகளிர் சுய உதவிக்குழுக்களை ஊக்குவிக்கும் பொருட்டு மாநில அளவில் சிறப்பாக செயல்படும் ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.300000/–மும், சிறப்பாக செயல்படும் 10 சுயஉதவிக்குழுக்களுக்கு தலா ரூ.100,000/–மும் வழங்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் ஒரு சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு ரூ.100,000/–வீதமும் மூன்று சிறந்த சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.25,000/–வீதமும் **“மணிமேகலை விருது’’** வழங்கப்பட்டு வருகிறது.

2010–2011 ஆம் ஆண்டிற்கு மாநில அளவில் மணிமேகலை விருது பெறும் பொருட்டு கீழ்க்கண்ட வாறு பிரேரனைகள் சென்னை மேலாண்மை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1 ஊராட்சி அளவிலான குழுக்கூட்டமைப்பு – பு.கடம்பங்குறிச்சி

கரூர் ஊராட்சி ஒன்றியம்.

2 சுதந்திரம் மகளிர் சுய உதவிக் குழு – சிந்தலவாடி ஊராட்சி, கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம்.

<u>10 மாநில / மாவட்ட அளவில் சிறந்த வங்கி மற்றும் வங்கி கிளைகளுக்கான விருது வழங்குதல் 2010 – 2011</u>

2009 – 2010 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு பல்வேறு திட்டங்களின் கீழ் அதிக அளவில் வங்கி கடன் இணைப்பு பெற்றுத் தந்த வங்கி / வங்கி கிளைகளை சார்ந்த வங்கியாளர்களுக்கு மாநில / மாவட்ட அளவில் விருதுகள் வழங்க சம்பந்தப்பட்ட வங்கி / வங்கி கிளைகளிலிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டு 2010 – 2011 ஆம் ஆண்டிற்கு மாநில / மாவட்ட அளவிலான சிறந்த வங்கி/ வங்கி கிளைகள் தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் வழங்கப்ப\;lJ.

1 <u>சிறந்த வங்கி</u>
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ( விருது மற்றும் சான்றிதழ்)

2 <u>சிறந்த வங்கி கிளைகள்</u>

- இந்தியன் வங்கி – குளித்தலை
  ( முதல் பரிசு – ரூ 15,000/– ரொக்கபரிசு மற்றும் சான்றிதழ்)

- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி – தாந்தோணிமலை
  ( இரண்டாம் பரிசு ரூ 10,000/– ரொக்கபரிசு மற்றும் சான்றிதழ்)

- இந்தியன் ஓவர்சீஸ் வங்கி – தோகைமலை
  ( மூன்றாம் பரிசு ரூ 5,000/– ரொக்கபரிசு மற்றும் சான்றிதழ்)

<u>11) ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மறுசீரமைத்தல்</u>

2008 – 2009ம் ஆண்டு முதல் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் ஊராட்சிகள் வாரியாக கூட்டமைப்புகளை மறுசீரமைப்பு செய்து அவற்றை சங்கங்கள் பதிவு சட்டம் 1975ன் படி பதிவு செய்யப்பட்டு, அவற்றிற்கு ஆறு மாதம் முடிவுற்றபின் தரமதிப்பீடு செய்யப்பட்டு ரூ ஒரு இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. மேலும், அவற்றில் இதுவரை ஒன்பது கூட்டமைப்புகளுக்கு வங்கி பெருங்கடனும் பெற்றுதரப்பட்டுள்ளது.

| வ. எ ண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மொத்த ஊராட்சிகள் எண்ணிக்கை | மறுசீரமைக்கப் பட்டவை | ஊக்கதொகை வழங்கப்பட்டது | பெருங்கடன் பெற்றுதரப்பட்டவை |
|---|---|---|---|---|---|
| 1 | கரூர் | 14 | 14 | 4 | 1 |
| 2 | தாந்தோணி | 18 | 17 | 3 | 0 |
| 3 | அரவக்குறிச்சி | 20 | 17 | 3 | 2 |
| 4 | க.பரமத்தி | 30 | 18 | 6 | 0 |
| 5 | குளித்தலை | 13 | 13 | 6 | 2 |
| 6 | கிருஷ்ணராயபுரம் | 23 | 18 | 3 | 1 |
| 7 | கடவூர் | 20 | 17 | 3 | 2 |
| 8 | தோகைமலை | 20 | 17 | 4 | 1 |
| | மொத்தம் | 158 | 131 | 32 | 9 |

**12 நகர்ப்புற குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்பு**

தமிழ்நாடு அரசின் அரசாணை நிலை எண் 61 நாள் 26.05.2010ன் வழிகாட்டுதலின்படி முன்மாதிரியாக 5 கூட்டமைப்புகள் அமைப்பதற்கு கீழ்க்கண்ட குடிசைப்பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு பகுதி அளவிலான மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளது. கரூர் நகராட்சியில்

- பாலம்மாள்புரம்
- வஞ்சியம்மன் கோவில் தெரு
- பசுபதிபாளையம்
- பசுபதி லே அவுட் மற்றும்
- திருகாம்புலியூர்

ஆகிய குடிசைப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 5 குடிசைப் பகுதிகளிலும் 14 பகுதி அளவிலான மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குடிசை பகுதி அளவிலான கூட்டமைப்பு (SLF)பசுபதிபாளையம் மற்றும் பாலம்மாள்புரம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளது.

**<u>2011 – 2012 ஆம் ஆண்டிற்கான இலக்கீடு</u>**

**2011 – 2012** ஆம் ஆண்டிற்கு தலைமை அலுவலகத்திலிருந்து தற்போது பின்வருமாறு உத்தேச இலக்கீடுகள் வரப்பெற்றுள்ளன. இவை அனைத்து தொண்டு நிறுவனங்கள் , கூட்டமைப்புகள் மற்றும் அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | விவரம் | உத்தேச இலக்கீடு |
|---|---|---|
| 1 | புதிய குழுக்கள் அமைத்தல் | 1203 |
| 2 | சுழல்நிதி வழங்குதல் | 1443 |
| 3 | பொருளாதாரக் கடன் | 172 |
| 4 | தனிநபர் கடன் | 121 |
| 5 | வங்கி கடன் இணைப்பு | 81.00 கோடி |
| 6 | இளைஞர் தொழிற்திறன்பயிற்சி | 700 |
| 7 | மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி | 150 |
| 8 | முற்றம் சந்தா | 9000 |

**13. வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 2011 – 2012**

உலக வங்கி நிதி உதவியுடன் ‘‘வாழ்ந்து காட்டுவோம் திட்டம்’’ தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் குறிப்பிட்ட பகுதிகளில் வறுமையைப் போக்கவும், முன்னேற்றவும் துவங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமங்களில் ஏழையிலும் ஏழையாக உள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இத்திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

பின்தங்கிய **16** மாவட்டங்களில், **70** வட்டாரங்களில் இத்திட்டம் அக்டோபர்–**2006** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேலும் **10** மாவட்டங்களில் விரிவு படுத்தப்பட்டு, இத்திட்டம் கரூர் மாவட்டத்தில் அரசு ஆணை MS No.27, நாள்.**28.02.2011**–ன்படி நடைமுறைக்கு வந்துள்ளது.

கரூர் மாவட்டத்தில், கீழ்க்கண்ட வட்டாரங்களில் வாழ்ந்து காட்டுவோம் திட்டம், பகுதி–I ஜீன்–2011 முதலும், பகுதி –II திட்டம் அக்டோபர் –2011 முதலும் நடைமுறைப்படுத்த உள்ளது.

| வ. எண். | வட்டாரத்தின் பெயர் | ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தாந்தோணி | 18 |
| 2. | கிருஷ்ணராயபுரம் | 23 |
| 3. | அரவக்குறிச்சி | 20 |
| 4. | கடவூர் | 20 |
| 5. | க.பரமத்தி | 30 |
| 6. | தோகமலை | 20 |

தேர்வு செய்யப்பட்ட வட்டாரத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

ஜீன்–2011 முதல் தாந்தோணி, கிருஷ்ணராயபுரம் மற்றும் அரவக்குறிச்சி வட்டாரங்களில் பகுதி–I –ஆக செயல்படுத்தப்படவுள்ளது.

மற்ற கடவூர், தோகமலை மற்றும் க.பரமத்தி வட்டாரங்களில் பகுதி–II –ஆக அக்டோபர் –2011 முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

ஆகவே, வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆறு வட்டாரங்களில் செயல்படுத்த உள்ளதாலும், இரண்டு வட்டாரங்களில் மட்டுமே மகளிர் திட்டப் பணிகள் செயல்படுத்த இயலும் என்பதாலும் தலைமை அலுவலகத்திலிருந்து மாற்றப்பட்ட இலக்கீடு வரப்பெற்ற பின் அனைத்து தொண்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கும் இலக்கீடு பிரித்து அளிக்க முடிவு செய்யப்பட்டது.

**26.05.2011–**ல் திட்ட அலுவலர் மற்றும் உதவி திட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களால் **2011–2012 –**ஆம் ஆண்டில் திட்டங்கள் செயல்படுத்துவது குறித்து நடத்தப் பெற்ற ஆய்வுக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் அடிப்படையில், **27.05.2011** அன்று முற்பகல் கரூர் மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் நடைபெற்ற தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சிறுசேமிப்பு) மற்றும் ( ஆதிநலம்) ஆகியோர்களுக்கும், பிற்பகல் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கிராம ஊராட்சி)–கள், வங்கியாளர்கள் மற்றும் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர்களுக்கு நடைபெற்ற மாவட்ட திட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் மற்றும் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டக் கூட்டத்தில் திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள், முன்னோடி வங்கி மேலாளர், நபார்டு உதவிப் பொது மேலாளர் , RSETIS செயலர் ஆகியோர்கள் கலந்து கொண்டு,**2011 – 2012–**ஆம் ஆண்டு மகளிர் திட்டம் செயல்படுத்துதல் குறித்தும்,உடனடியாக புதிய குழுக்கள் அமைத்தல், சுழல்நிதி, பொருளாதாரக் கடன் பெற தகுதியான குழுக்களை தரம் பிரித்தலுக்கு அழைத்து வருதல், தொழில்கள் தேர்வு செய்தல் மற்றும் நேரடிக் கடன் பெறுவதற்கு தகுதியான குழுக்களை கண்டறிந்து கடன் பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல் குறித்து பணிகள் உடன் துவங்கத் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே மானியம் விடுவிக்கப்பட்டு கடன் விடுவிக்கப்படாத குழுக்களுக்கு ஜீன் **16–**ந் தேதிக்குள் கடன்கள் விடுவிக்கவும் தெரிவிக்கப்பட்டது. பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் கட்டப்படும் PLF கட்டிடங்கள் மற்றும் கிராம சந்தை பணிகளை துரிதப்படுத்தி முடிக்கவும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு செயல்பாடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

## 14. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் மகளிர் திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துதலை மையமாக வைத்து செயல்பட்டு வருகிறது . சுய உதவிக் குழுக்களுக்கு தேவையான தொழில் நுட்ப வசதி மூலப்பொருட்கள் விநியோகம் செய்தல், பொருட்காட்சிகள் நடத்துதல் போன்ற பணிகளை செய்து வருகிறது. இச்சங்கத்தில் மேலாளர், விற்பனை பணிப்பெண்/ கணிணி இயக்குபவர் மற்றும் துப்புறவு பணியாளர் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர்.

தாந்தோணியில் மாவட்ட பூமாலை வணிக வளாகத்தில் 18 கடைகள் கரூரில் நான்கு கடைகள் மற்றும் குளித்தலையில் இரண்டு கடைகளும் உள்ளன. மாவட்ட அளவில் சுய உதவிக் குழு உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்வதற்காக 2011–2012 ஆம் ஆண்டிற்கு கண்காட்சி கால அட்டவணை தயார் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.